

# தமிழ் வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண்-46

## அறிவிப்புகள்

## 2012 - 2013

# தமிழ் வளர்ச்சி
# மானியக் கோரிக்கை எண்.46

## 2012-13ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்

### 1. இளம்தமிழர் இலக்கியப் பட்டறை

சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் சுழற்சி முறையில் துறை சார்ந்த வல்லுநர்களை அழைத்து ஆர்வமுள்ள இளம் எழுத்தாளர்களுக்கு கவிதை, கட்டுரைப் பயிற்சியும், பேச்சாளர்களுக்குப் பேச்சுப் பயிற்சியும் ஒரு வார காலத்திற்கு அளிக்கப்படும். இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.10.00 இலட்சம் வழங்கப்படும்.

### 2. ஆட்சித் தமிழ் பயிற்சி

தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்டுள்ள ஆட்சித் தமிழ் நூல் அடிப்படையில் ஆட்சிமொழி வரலாறு, ஆட்சிமொழிச் சட்டம், ஆட்சிமொழிச் செயலாக்கம் தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் அரசுப் பணியாளர்களுக்கு ரூ.9.30 இலட்சம் செலவில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்.

**ஆட்சிமொழிக் கருத்தரங்கம்:** ஆட்சிமொழிக் கருத்தரங்கம் மாவட்டம் தோறும் நடத்திட தற்போதுள்ள செலவினத் தொகை ரூ.5,000/–த்தை ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ.1.60 இலட்சத்துடன் கூடுதலாக ரூ.4.80இலட்சம் ஒதுக்கப்படும்.

### 3. வெளிநாட்டில் உள்ள அரிய தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிடல்

தமிழகத்தில் கிடைக்கப்பெறாத, வெளிநாட்டு நூலகங்களில் உள்ள, அரிய தமிழ் நூல்களை மின்எண்மத்தில் பதிவு செய்து நூலாக வெளியிடும் பணி ரூ.1கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 4. தமிழ் வளர்ச்சித் துறைக்குத் தனி வலைத்தளம்

தமிழ் வளர்ச்சித் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கப் பணிகள், தமிழ் வளர்ச்சி தொடர்பான திட்டங்கள், நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள், ஆட்சிச் சொல்லகராதி போன்றவற்றை அரசு அலுவலர்களும் பொது மக்களும் உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறைக்கென ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் தனியாக ஒரு வலைத்தளம் அமைத்து உருவாக்கப்படும்.

## 5. பிற நாட்டு அறிஞர்கள் பார்வையில் தமிழ் – நூல் வெளியீடு

வெளிநாட்டு மொழியியல் அறிஞர்களால் எழுதப்பட்ட தமிழ் மொழியின் வரலாறு மற்றும் சிறப்புகள் குறித்த கருத்துகள் அனைத்தையும் திரட்டி தமிழிலும், ஆங்கிலத்திலும் நூல்களாக ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும்.

## 6. அறநெறிக் கருவூலம்

தமிழ் நீதி நூல்களில் மாணவர் பருவத்திற்குத் தேவையான கருத்துகளை இன்றைய மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு வல்லுநர் குழுவை அமைத்து **அறநெறிக் கருவூலம்** எனும் கையேடு தொகுத்து உருவாக்க ரூ. 1.00கோடி மதிப்பீட்டில் அச்சிடப்பட்டு வழங்கப்படும்.

## 7. பொன்மொழிக் களஞ்சியம்

தமிழ் மொழியின் பெருமையைப் பறைசாற்றும் சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழ் மொழியிலுள்ள புகழ் வாய்ந்த பொன்மொழிகளை இலக்கியம் வாரியாக தொகுத்து பொன்மொழிக் களஞ்சியம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும்.

## 8. சிறந்த நூல்களுக்குப் பரிசு

சிறந்த நூல் பரிசுத் திட்டத்தில் மகளிர் இலக்கியம், தமிழர் வாழ்வியல் என்ற இரு புதிய வகைப்பாடுகள் உருவாக்கப்படும். இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூ.12.40 இலட்சத்துடன் கூடுதலாக ரூ.80,000/– ஒதுக்கப்படும்.

## 9. உலகத் தமிழ்ச் சங்கம் – மதுரை

உலகத் தமிழ்ச் சங்கம் மீண்டும் புதுப் பொலிவுடன் மதுரையில் செயல்படும் வகையில்

தனிஅலுவலர்,
நிதி அலுவலர்,
கண்காணிப்பாளர்,
உதவியாளர்,
இளநிலை உதவியாளர்,
தட்டச்சர்,
ஓட்டுநர்,
அலுவலக உதவியாளர்

ஆகிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

ஆண்டொன்றுக்கு ரூ.51 இலட்சம் வழங்கப்படும்.

## 10. வாகனங்கள் வாங்குதல்

புதியதாக தோற்றுவிக்கப்பட்ட அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு இரண்டு ஈப்புகள் வாங்க ரூ.10,50,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இரண்டு ஓட்டுநர் பணியிடங்கள் ஏற்படுத்தி நிரப்பப்படும்.

************